# மெட்ரோ ரயிலின் 2ம் கட்ட பணி விரைவுப்படுத்தப்படும்



2009ம் ஆண்டில் முன்னாள் முதலமைச்சர் கலைஞரின் தலைமையிலான அரசு, சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகளைத் தொடங்கியது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் 2ம் கட்டப் பணிகள் விரைவாக நிறைவேற்றப்படுவதை இந்த அரசு உறுதி செய்யும். இந்த திட்டத்தின் முதல் கட்டத்தைப் போலவே, 50:50 என்ற செலவு பகிர்வு அடிப்படையில், ஒன்றிய அரசு தங்களுடைய பங்கு மூலதனத்திற்கு ஒப்புதலை விரைவாக வழங்கவேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்தும். மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பெருந்திரள் விரைவு போக்குவரத்து அமைப்புகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.